**வில்கமுவ பிரதேச சபையி - 2024**

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வில்கமுவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வில்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 (அ) மற்றும் 1.6.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 1,817,316 ஆன நிர்மாண கடன்பட்டோர் செலவு மீதி ஒன்றாகவும் நடைமுறை பொறுப்பினுள் நிர்மாண வைப்புக்கள் ரூபா 67,596 எனவும் மொத்தம் ரூபா 2,743,340 ஆன கடன் கொடுத்தோர் வரவு மீதி ஒன்றாகவும் தவறுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிர்மாணங்கள் மற்றும் திருத்த வேலைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,415,000 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப் பட்டிருந்த நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட 16 கணக்கு விடயங்களின் மீதிகளுக்குரிய கணக்கு மீதிகள் அதற்குரிய உப ஆவணங்களுடன் ஒப்பிடும் போது | எதிர்காலத்தில் பரீட்சித்து சரிசெய்ய அந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | கணக்கு மீதிகளை தொடர்புடைய உப ஆவணங்களுடன் ஒப்பிட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 13,366,346 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) நிலையான சொத்து கணக்கின் மீதி ரூபா 312,570,272 ஆக இருந்ததுடன் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தால் / நன்கொடையால் பங்களிப்பு கணக்கு ரூபா 317,075,392 ஆக இருந்தமையால் ரூபா 4,505,120 ஆன இணக்கமின்மை காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 1,501,544 ஆன தொங்கல் கணக்கின் மீதிக்குரிய தவறுகளை இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பரீட்சித்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மீதியை இனங் கண்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 8,909,246 ஆன 04 சொத்து விடயங்கள் பதிவேடுகள் மற்றும் உரிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிபடுத்த முடியாமல் இருந்தது. | எதிர்காலத்தில் இம்மீதிகள் தொடர்பாக பரீசித்து பதிவேடுகள் மற்றும் உரிய அட்டவணைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | இக்கணக்கு மீதிகளுக்குரிய பதிவேடுகள், உரிய அட்டவணைகள் மற்றும் கோவைகள் என்பன சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்** | | | |
| 24 ஆம் பிரிவு | பிரதேச சபைக்குச் சொந்தமான 271 வீதிகள் பற்றிய தகவல்கள் | வீதிகளை அளவீடு செய்யப்பட்டு வர்த்தமானியில் | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வர்த்தமானி மூலம் வெளியிடப்படவில்லை. | வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | வீதிகளை வர்த்தமானி மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| (i) | நி.பி 104 (4) | சபைக்குச் சொந்தமான வீதி விளக்குகளுக்குரிய ரூபா. 126,700 பெறுமதியான 21 வயர் ரோல்கள் மற்றும் 40 மின் விளக்குகள் காணாமல் போனமை தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும், பொறுப்பானவர் களிடமிருந்து சம்பந்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | நி.பி 104 (4) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | நி.பி 571 (3) | 2021 ஆம் ஆண்டு முதல் 2024 வரையிலான காலப் பகுதிக்குரிய காலாவதியான ரூபா 994,472 ஆன 19 வைப்புக்களைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | வைப்புக்களை தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்ய கைவிரலடையால இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை. | நிறுவனத் தலைவரின் மேற்பார்வையின் கீழ் வருகை மற்றும் புறப்பாடு பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்பதாக. | கைவிரலடையால இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,525,757 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 5,793,508 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,289,073 | 2,799,175 | 2,400,556 | 1,288,144 | 2,485,000 | 2,306,981 | 2,205,682 | 889,525 |
| (ii) | வாடகை | 4,810,600 | 5,081,811 | 5,394,687 | 3,930,206 | 5,995,600 | 4,314,420 | 3,936,157 | 4,243,082 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,100,000 | 1,212,402 | 1,212,402 | - | 1,120,000 | 1,063,989 | 1,063,989 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 9,314,000 | 9,468,765 | 8,851,767 | 9,456,734 | 10,111,000 | 9,451,667 | 12,939,441 | 8,839,736 |
| | | 17,513,673 | 18,562,153 | 17,859,412 | 14,675,084 | 19,711,600 | 17,137,057 | 20,145,269 | 13,972,343 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வாடகை** | | |
| சபைக்குச் சொந்தமான பொது சந்தையின் 11 கடைகளில் இருந்தும் 04 தற்காலிக கடைகளிலிருந்தும் 2009-2012 காலப்பகுதியில் ரூபா 944,869 ஆன கடை வாடகை மற்றும் இறைச்சிக் கடை வாடகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை பதிவழிப்பதற்காக கோரல் முன்வைக்கப்பட்டு உள்ளதாக. | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**பொது மக்கள் சுகாதாரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 02 நீர் செயற் திட்டங்களின் 739 நீர் பாவனையாளர்களுக்கு சுத்திகரிக்கப்படாமல் குடிநீர் விநியோகிக்கப் பட்டிருந்தது. | நீர் சுத்திகரிப்பு முறையின் முதன்மை நிலை மணல் வடிகட்டுதல் முறை மூலம் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாக. | நுகர்வோருக்கு சுகாதாரமான முறையில் குடிநீர் விநியோகிக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வாரச் சந்தை வருமானம் ரூபா 3,849,296 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,826,816 தொகை முன்னைய ஆண்டு களுக்குரிய நிலுவை கட்டணங்களாகும். | வாரச் சந்தை கட்டணங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக அறவிடுவதற்கு நடவடிக்சைக எடுப்பதாக. | நிலுவை கட்டணங்களை அறவிடல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 18 அரச நிறுவனங்களிடமிருந்து நிலுவை நீர்க் கட்டணங்கள் ரூபா 97,280 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்சைக எடுப்பதாக. | - மேற்படி - |

## 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 16,660,000 ஆன 04 வாகனங்கள் 03 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன. | வாகனங்களை கைதவிர்க்க மற்றும் ஏலவிற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வாகனங்களை பயன்பாட்டுக்கு எடுக்கவும் பயன்படுத்த முடியாத வாகனங்களை கைதவிர்க்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை பயன்படுத்தும் 54 காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அஅங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் பொழுது 10 பதவிகளில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்வதாக. | வெற்றிடங்கள் பூரணப்படுத்தப் படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணித்த, ஓய்வு பெற்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 421,412 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஊழியர் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதேச சபையினால் நிலையான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டு இருந்த போதிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு பண ஒதுக்கீடு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு இலக்குகள் செயற்படுத்தப்பட வேண்டும். |